www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11Com

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு டிசம்பர் 2023

வகுப்பு 11
வணிகவியல்

நேரம்: 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **20×1=20**

1) வியாபாரம் மற்றும் வணிகம் ------ பேரரசில் பொதுவானவையாக இருந்தது
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

2) மருத்துவர் தொழில் என்பது
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்

3) வங்கியியல், கணக்கீடு மற்றும் காப்பீடு உள்ளடங்குவது
அ) தனிச்சேவை ஆ) பொதுச் சேவை இ) விநியோகச் சேவை ஈ) நிதிச் சேவை

4) ----- சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்
அ) இந்துச் சட்டம் ஆ) மிட்டாக்சரா சட்டம்
இ) தயாபாகா சட்டம் ஈ) மேற்கண்டயாவும்

5) ஒருகூட்டுப் பங்கு நிறுமம் முறையாக அமைக்கப்பட்டது என்பதைச் சான்று பகரும் ஓர் ஆவணம்
அ) செயல் முறை விதிகள் ஆ) தகவலறிக்கை
இ) அமைப்பு முறையேடு ஈ) தீர்மானம்

6) ராக்டேல் சொசைட்டியை தோற்றுவித்தவர் -----
அ) ராபர்ட் ஓவெண் ஆ) H.C.கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்போர்ட்

7) அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு -----க்குக் குறையாமல் இருக்க வேண்டும்
அ) 75% ஆ) 60% இ) 95% ஈ) 51%

8) இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1 ----- ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933

9) இந்தியாவின் மிகப் பெரிய வணிக வங்கி
அ) IFIFI ஆ) SBI இ) PNB ஈ) RBI

10) பண்டககாப்பகம் ----- மையமாக பொருட்களை வைத்திருக்கிறது
அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல் இ) வழங்கல் ஈ) விற்பனை செய்தல்

11) சென்னை நகரில் டிராம் வண்டி ----- ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்தது
அ) 1933 ஆ) 1923 இ) 1943 ஈ) 1953

12) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ----- ஆகும்
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அன்மைக்காரணம்

13) பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளைக் குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டக காப்பு

14) உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு
அ) கடனாளியிடமிருந்து பெற்ற தொகை ஆ) வணிக வங்கி கடன்
இ) பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை
ஈ) தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

15) வைப்பு இரசீது வெளியீடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது
அ) பன்னாட்டு சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) தற்போதைய பங்குதாரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

16) சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

17) வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர்
அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர் இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்

18) STCயின் விரிவாக்கம்
அ) மாநில பயிற்சி மையம் ஆ) மாநில பயிற்சி சபை
இ) மாநில வணிக மையம் ஈ) மாநில வணிக கழகம்

19) உலகவர்த்தக அமைப்பின் தினசரி அலுவல் -----யிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது
அ) மேலாண்மைக்குழு ஆ) பொதுக்குழு
இ) நிர்வாகக்குழு ஈ) பொதுச் சபை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

20) இளவருடன் செய்யும் ஒப்பந்தம்
அ) செல்தகு ஒப்பந்தம் ஆ) செல்லாத ஒப்பந்தம்
இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்

## பகுதி - ஆ

**II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்:** **7×2=14**

21) அல்லங்காடி என்றால் என்ன?
22) பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
23) கூட்டுரு நிறுவனங்கள் யாவை?
24) கூட்டாளி என்பவர் யார்?
25) பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
26) கூட்டுறவு கடன் சங்கம் என்றால் என்ன?
27) முற்றுரிமை என்றால் என்ன?
28) தாமதமும் சிகப்பு நாடா போக்கும் என்றால் என்ன?
29) வங்கியின் வரைவிலக்கணம் யாது?
30) ஆகஸ்டு 2015ல் இந்திய ரிசர்வ் வங்கி கோட்பாட்டுடன் கூடிய உரிமம் வழங்கிய வங்கியின் பெயர் என்ன? அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

## பகுதி - இ

**III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்:** **7×3=21**

31) தேசிய மின்னனு நிதிப் பரிமாற்றம் விளக்குக.
32) குளிர் சாதன பண்டக காப்பு என்றால் என்ன?
33) கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
34) பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
35) தனி உரிமையியல் வகைகள் யாவை?
36) பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? (ஏதேனும் 3)
37) அடகுக் கடன் என்றால் என்ன?
38) பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது? (ஏதேனும் 3)
39) மொத்த வியாபாரியின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
40) கழிவு அடிப்படையில் செயல்படும் பன்னாட்டு முகவர் பற்றி விளக்குக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்:** **7×5=35**

41) அ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) செலுத்தல் சமநிலைக்கும், வாணிபச் சமநிலைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

42) அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைகுமுள்ள வேறுபாடுகள் யாவை?

**(அல்லது)**

ஆ) செலுத்தல்களை ஒதுக்கிவைத்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் கூறுக.

43) அ) இழப்பீடு என்றால் என்ன? பல்வேறு வகையான இழப்பீடுகள் யாவை?

**(அல்லது)**

ஆ) வருமானம் என்ற சொல்லில் அடங்கியுள்ளவை யாவை?

44) அ) தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)

45) அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5)

46) அ) சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

47) அ) பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)

-----

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com